Koviloor Digital Library

ஸ்ரீ

திருஞானமுத்திரைக்கோவை 9.

வடிவழகிய நம்பிதாஸர்

இயற்றிய

(குருபரம்பரை முதற்பாகம்)

ஆழ்வார்கள் வைபவங்கள்

பதிப்பாசிரியர்

பெரியன் வெ. நா. ஸ்ரீநிவாஸய்யங்கார்

திருஞானமுத்திரைப் பிரசுராலயம்
ஆழ்வார்திருநகரி.




Kmm0965-3

காபிரைட்] [விலை அணா 8

Koviloor Digital Library

Koviloor Digital Library



ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

* ஆழ்வார்கள் வைபவம்.

க. முதலாழ்வார்கள் பிரபந்தம்.

1. பிறவிபல பிறந்திடவும் பிணங்கியவ ரோடுயிர்க
ளுறவின்றிப் பகையாகி யாக்கர்களா யுயிர்மாய
வறமெலிந்து சோதிசில ரகப்பட்டார் தம்மொடும்போய்த்
துறவுசெறி யந்தாமம் புகுந்திருந்தோர் சூட்சியினால்.

2. மான்காட்டி மான்பிடிக்கு மதியினர்போல் வரியளிசேர்
தேன்காட்டுந் துழாயினான் சீவைகுந்த முத்தர்களுக்
கூன்காட்டா னூன்காட்டி யுலகமுய்யும் பொருட்டாக
வான்காட்டு மயர்வில்லா மதிநலமு மகிழ்ந்தருளி.

3. வாழ்விப்பான் யோனியராய் முதலாழ்வார் களைமண்ணிற்
றாழ்வில்லா வற்பசியோணம்மவிட்டஞ் சதையத்திற்
சூழ்புரிசைக் கச்சிமல்லை மயிலையெனுந் தொன்னகரி
லாழில்பொய்கை பூதம்பே யெனுநாமத் துதிப்பித்தான்.

வேறு.

4. ஏமவுலகி லிடர்நீங்க வெவ்வுயிர்க்குங்
காமக் குரோதாதி கால்குலையச் செந்திருவின்
நாமம் விளங்க நறையார் பசுந்துளவத்
தாமமுடியான் றமராய மூவர்களும்.

வேறு.

5. ஒருவரை யொருவர் காணா துரைத்தவப் பதிகடோறுந்
திருவளர் மார்ப னன்றி செகத்திலோர் துணைகாணாதே
வருபகல் பலவும்வைகி வளருநா ளொருநாண் மாயக்
கருநெறி கடக்கின்றாரைக் காசினி யெங்குநாடி.

6. திரிந்துநாங் காண்டல்வேண்டு மெனத்திரு வுளத்திலெண்ணிப்
பரிந்தெழு சிந்தைப் பொய்கை பழனஞ்சூழ் கச்சி நீங்கி
விரிந்தெழு கருணை பொங்க விடைகொள்வார் கோவலூரிற்
புரிந்தவன் புடையமாய னருளினா லதனுட்புக்கார்.

---

* இது பழைய நூலிலிருந்து பெரியன். வெ நா. ஸ்ரீநிவாஸனால் எடுத்தெழுதப்பட்டது.

Koviloor Digital Library

7. புக்கவர் கமலக்கண்ணன் பூங்கழ லிணைந்து வாழ்த்தி
யக்கா மெட்டுமுள்ள படியினு லமையவோதி
முக்கணுன் சாபந்தீர்த்த முதல்வனென் றன்புசெய்து
தக்கவப் பதியி லன்று தங்குவான் சமைந்தபோதில்.

8. பூதமு மல்லை யென்னும் பொன்னகர் தன்னு னின்று
வேதநா யகற்காளாய மெய்யரை யெங்கு நாடிப்
பாதநா மரைக ளேத்திப் பரவுவான் பரிந்த வன்பாற்
போதுவார் கோவலூரிற் பூவைப்பூ வண்ணனைய.

9. அருமறை முதல்வன்கூட்டு மருளினு லதனுட்சென்று
கருமுகில் வண்ணன் செம்பொற் கழலிணைத் தன்றவ்வூரின்
மருவிட வந்தநாளிற் பேயரு மயிலை நீங்கித்
திருவருட் செயலால் வந்து திருக்கோவ லூரைச்சேர்ந்தார்.

10. பொருந்திய மூவர்தாமும் புனிதனை நினைந்து வெவ்வே
றிருந்தன ரிரவிபட்டா னிராப்பொழு தடங்கிவைகத்
திருந்திய பொய்கை சென்றோர் வேதியன் மனையிற்சேர்ந்து
நெருங்கிடை கழியின் மன்னித் துயில்கொள்வா னினைந்து சார்ந்
தார்.

வேறு.

11. பொருவினெறிப் பூதத்தார் புகுந்திதனு ளுறைபவரார்
கருமிவிராத் தங்குமிட மெனப்பொய்கை தான்விழித்திங்
கொருவருக்கே கண்டுயில வுள்ளதிட நீரணைந்தா
லிருவருக்கு மிருந்திடலா மெனத்திறந்தார் திருக்கதவை.

12. முன்சென்றார் பின்சென்றார் முகங்காணு ரிருளின்கண்
பொன்சென்ற விடைகழியி லிருவர்களும் புகுந்திருப்ப
மின்சென்ற சுடராழி விண்டுவருள் கொண்டுவரப்
பின்சென்ற பேயாரு மம்மனைவா யிற்புறமாய்.

13. சென்றாரிவ் விடைகழியிற் செறிபவரா ரிடமுளதோ
குன்றாத வன்புடையீர் கூறியிடு மெனவுரைப்ப
நன்றாய்முன் னொருவர்படுத் தோமிருவர் நன்கிருந்தோ
நின்றீர் நீர் வந்தணைந்தா னின்றிடலா மூவர்களும்

Koviloor Digital Library

14. எனவுரைப்பத் திறவுமென்று ரிருந்தவர்தா டிறந்துநின்றார்
மனமகிழ்ந்து சென்றவரு மற்றவர்க ளுடனின்று
ரனவயல்சூழ் கோவலூ ராயனு மாயவனும்
புனைமலர்ச்செந் திருவோடும் புகுந்திருளி லாங்கவரை.

15. நெருங்கினு னெருக்குண்டு நின்றாழ்வார் மூவர்களு
முருக்காட்டா திவனெருக்கி யுறைபவரைக் காண்டுமெனுங்
கருத்திறைற் சுடர்ஞானக் கனல்விளக்கை யேற்றினர்
திருக்கண்டேம் பொன்மேனி கண்டேமென் றுடன்றெளிந்தே.

16. ஆடினர் குணலைக்கூத் தங்கைகொட்டி நான்மறையைப்
பாடினர் பாரோடும் பணிந்தெழுந்து பதுமத்தாள்
சூடினற் சுகவடிவைப் பிரிந்ததுன்ப மவைதிரக்
கூடின ரானந்தக் கொழுஞ்சோதிக் கடற்குளித்தார்.

17. அத்திக்கா யுட்பீட மத்திநடு வாதியந்த
மெத்திக்கா லும்மறியா வகைபோனின் னிடையிலண்டந்
தொத்திப்பா முறவதனுட் பிரமனர னெனத்தோன்றி
வத்தித்தா ருனையறியா ரென்றாலிம் மண்ணுலகில்.

18. பேரானந் தச்சோதிப் பிரளயமா நினையடையு
மாராத காதலரா யகப்படுவார் தமைக்காணேன்
நாராயணுசெய்யுந் திறமறியே னவில்கவெனக்
கூராழி சங்கேந்துங் கொண்டலுடன் குறித்துரைத்தார்.

19. மூவர்களு மவைகூற மூவுலகு முண்டுமிழ்ந்த
தேவர்கடே வன்னகைத்துச் செப்புவா ளீர்வேட்டா
ரேவர்கடா மடைத்துடைத்தா லாடுவா ரிரும்புனலோ
டாவபின்னு மடைப்பதல்லா லருள்கவென வாழ்வார்கள்.

20. செங்கமலை தனிவாழ்வின் சேவடியி லுறப்பணிய
வங்கமுற மூவரையு மெடுத்தணைத்தி தருள்புரியு
முங்கள்பொருட் டாலுலகந் திருந்தவின்ப முண்பதியான்
பங்கமிலா நெறியுடையீர் பார்முழுதுந் திருத்துமென.

21. எம்பெருமா னின்றனனுங் கிணையில்பெருங் கருணைமிகு
மன்பர்களா மூவர்களு.மச்சுதன் சிரருணேக்கி
யின்பமயமேயென் றிரங்கிக் கரைந்தமுதங்
கும்பர்முதன் மாநிலத்தோருய்யும் வண்ணமின்னிசையால்

Koviloor Digital Library

வேறு.

22. வையந் தகளியென்றும் வார்கடலே நெய்யென்றும்
வெய்யகதிரோனை விளக்கேற்றி னேனெனவுங்
கையம் புதத்தான் கழற்கேறு மந்தாதி
பொய்கைப் பிரான்கவிஞர் போரேறு கட்டுரைத்தான்.

23. அன்பே தகளியென்று மார்வமே நெய்யென்று
மின்புருகு சிந்தை யிடு திரியாமென்று
மின்பொருவு மாழி விமலன் கழற்குலகிற்
புன் புறவி னீங்கவிளக் கேற்றினார் பூதத்தார்.

வேறு

24. திருக்கண்டே னென்றுபேய் செப்பியசீர்ச் சொற்றொகையா
லிருக்கின்முடி வானவனை யேத்தினர் சீர்ச் சொன்மாலை
பெருக்குநெறி மூவருஞ்செய் பேருரு ண்மூ வந்தாதி
கருக்கடலை யுயிர்கடக்குங் கப்பலெனும் படிகழறி.

25. வாழ்வித்தா ருலகனைத்தும் மாமாயைப் பெரும்பிணியை
யாழ்வித்தார் முதன்மூவ ரெனத்தோன்று மாழ்வார்கள்
வீழ்வித்தார் திங்கடொறு மும்மாரி மெய்ஞ்ஞானஞ்
சூழ்வித்தா ரனைவரையு மரிநாமஞ் சொலவைத்தார்.

26. இவ்வண்ண முலகனைத்துந் திருத்திவர விவரருளு
மெய்வண்ணப் பாமாலை வீட்டைவார்க் கேணியாய்
மைவண்ணப் பரஞ்சோதி வைகுந்த மேற்றுவித்தப்
பொய்வண்ண மில்லாதார் பலகாலம் போக்கினார்.

27. அப்படியே பலகால மற்றதற்பின் மூவர்களு
மெய்ப்படிந்த பரஞ்சோதி வெள்ளத்தான் வீடணைந்தார்
பொய்ப்படிந்த வறுசமயப் புரையிருளுக் கருக்கர்களா
யிப்படியை விளக்கினா ரிறைபிரிவுக் காற்றாமல்.

ஆழ்வார்கள் வைபவம்—க. முதலாழ்வார் பிரபந்தம்.

பாசுரம் 27-ம் முற்றும்.

Koviloor Digital Library

2; பெரியாழ்வார் பிரபந்தம்.



1. பொய்கை பூதம் பேயென்னப் புகல வரிய முதலாழ்வார்
செய்ய கமலத் திருவடிக டிருந்த விறைஞ்சித் திருவருளான்
மெய்கொள் புதுவை நகர்வந்த விஷ்ணுசித்தன் கதைவிரிவை
யையைம்புலனு லலைப்புண்ணு மடியேனறிந்தபடியறைவேன்.

வேறு.

2. விண்ணாட்டு ளந்நாம வியன்புரிசை வேந்தனுக்கு
மண்ணாட்டு ளான்மாவாந் தவசமருள் வழிநடத்தி
யெண்ணாட்டு மூவர்களு மேகியபின் னிருநிலத்தின்
கண்ணாட்டி நீங்காத களப்புலனுய்க் குறும்புசெய்யும்.

3. வேடர்களோ ரைவர்களு மேதினியின் மிக்கவிருட்
காடுமலை யன்றிவெளி யேயிடமாய்க் கலித்திலங்கு
நாடுமகின் கீழாய நற்பதியு நசிப்பித்து
மூடவிலங் கவைசாத்தி முடித்தனர்கள் புவிமுழுதும்.

4. அத்திறத்தார் புவிமுழுது மல்லலுறும் படிகண்டு
மெய்த்திறத்தான் மெய்வீட்டில் வீற்றிருந்தே முலகாள்வான்
பொய்த்திறத்தார் புலைச்சர்ப்பம் பொடியாகக் கருடனைத்தன்
சித்திரத்தாற்பெரியாழ்வா ராயுலகைத் திருத்தென்றான்.

5. என்றிறைவ னருள்புரிய விறையருளுந் திருவருளு
மொன்றியசீ ரன்பினு லுடன்கொண்டு புவியிலிறை
சென்றுதயில் கொண்டவருட் சிறந்தவில்லி புத்தூரி
னன்றிதரும் வேதியரிற் சோழியரென் றேநவிலும்.

6. குலத்திநெறி யுடைமுகுந்தர் தந்தையாய்க் கோதில்வா
நலத்திஞர் தேவியார் பற்புமைநற் றுயாராய்
நிலத்தினிருள் கெடத்தோன்று மருக்கனென நிலவுமுயிர்
புலக்கூடா நிசியொழிக்கும் போதமாக் கதிரவனுய்.

7. ஆனியெனுந் திங்களினில் வளர்பிறையிலருஞ்சோதி
மேனியனுர் சோதியினில் விண்ணவர்பூ மழைசொரிய
வானில்வரு முகிலொழியு மறையொலியு மாறுசெயப்
பானிலா முகத்தியர்கள் பல்லாண்டி னிசைபாட.

Koviloor Digital Library

8. அறந்தழைப்ப மெய்ஞ்ஞானம் யாவர்களு மறிந்துய்ய
மறந்நிய வேரோடு மடியவஞ்சம் பாழாகத்
திறந்திறம்பா துயர்ந்தோங்கத் நிகிலைகால் குலைந்தோட
வுறங்கினா னுடுகடா வினாதே யுயிர்நோக்க:

9. திருவவதாரஞ்செய்தார் செகமுழுது மீடேற
மருவமரும் பொழிற்புதுவை வடபெருங்கோ யிலானன்று
தருகுழலி தனைநோக்கிச் சதஞ்சிவ னெனவாழ்த்திப்
பொருவவருக் கவரேயாய்ப் புவிமீதில் வளர்ந்திடுநாள்.

10. பூதமுத னாயகன் சீர்ப் பூங்கழற்கீழ்ப் பசுந்துளவா
லேதமிலாப் பூமாலை பாமாலை யெனுமிரண்டு
மாதரவி னாற்கட்டி யருளவல்ல வாழ்வார்க்கு
வேதநெறி விஷ்ணுசித்த னெனுநாமம் வியந்துரைத்தார்.

11. தருக்காக்கு மிந்திரனுஞ் சதுமுகனுஞ் சராசரமு
மெருக்காக்குஞ் சடையானு மிறைஞ்சவெய்தா திடர்க்கரியி
லுருக்காக்கும் பெருமானை யுவந்துபல்லாண் டெனவோதித்
திருக்காப்பன் றிடுவார்க்குத் திருக்காப்புஞ் செய்தனரால்.

வேறு

12. பூதத்தனி நாயக னாபலையார் புனலுட்டுயிலும் புயன்மேனியினைப்
வேதத்தனிநாயகனே யெனவான் விடையாரயனார் விண்ணோர் கோமா
னோதிக்கரை வாரறியானெறியா லுலகிற் றமர்கட்குதவுந் திருமால்
பாதக் கமலங்காணீரென்றார் பாதக்கமலங் கண்டார் பலரும்.

வேறு

13. ஒத்தவரு மிக்கவரு மன்றியொளி ரும்பன்
னோசமவை யேழுமுல கேழு மலையேழு
மித்திறம லாதுபிறி தில்லையென வொல்லை
யின்பமுறு மீரடியி னாலுற வளர்ந்தான்

முத்துநிறை யன்னநகை பத்திகள் விளங்கு
மொய்ம்மல ரினும்மிருது வாமுளரி யந்தாட்
பத்துவிர லுங்காண்மி னென்றவர் பதத்திற்
பத்து விரலுந் தொழுது பத்தர்கள் பரிந்தார்.

Koviloor Digital Library

வேறு.

14. விணைக்கா றீயொடு மிக்கவி ரண்டை
வேதனை யாலமிடற்று ஞரைப்
பணைக்கா ளன்மறை யைப்பக லோரைப்
பலவைக் கனிவா யுறவுண் டுறவோர்
துணைக்கா லாகக் கொண்டிலை மீதிற்
றுயிலும் பெருமா டிருமா லழகார்
கணைக்கால் காண்மி னெனக்கசி வோர்தங்
கணைக்கால் கண்டு களித்தன ரன்பர்.

வேறு.

15. பாராளு நூற்றுவரைப் பாழாக்கிப் பாண்டவருக்
காராத வின்ப மருளப் பிறந்த பிரான்
சீரார் கருணைத் திருமுழந்தாள் காண்மினென்று
னேரார் முழந்தாள் யாவருங்கண் டின்புற்றார்:

16. வங்கக் கடற்றுயின்ற மாமான் மதுசூதன்
வெங்கட் களிறடர்த்தான் டைவர்களை வெல்லுவித்த
செங்கமலக் கண்ணான் றிருக்குறங்கு காண்மினென்று
னங்கக் குறங்கை யனைவருங்கண்டாதரித்தார்.

17. புன்புலத்தார் பாரம் புவிமடந்தை யாற்றரிதென்
றன்புறநின் றேத்த வவனியின்கட் போந்த பிரான்
மின்பொறுத்த ஜோதி விளங்கு முத்தங் காண்மினென்று
னின்பமுறு முத்தம் யாவருங்கண் டின்புற்றார்.

18. வையமுழுதும் வயிற்றுள்வைத்துத் தேவகியா
ருய்ய வழகா ருதரத் துதித்த பிரான்
மைய னையஜோதி மணிமருங்குல் காண்மினென்ற
வையன் மருங்கை யனைவருங்கண் டாதரித்தார்.

19. சத்தம் பரிச முருவங் தரைக்கந்த
மொத்த குரம்பைதொறு முட்டியென்னை யாட்டுவிக்கு
மத்தன் றிருவுந்தி யாயிழையீர் காண்மினென்ற
நித்தனெழி லுந்தி கண்டு நீணிலத்தோர் வாழ்த்தினர்.

Koviloor Digital Library

20. கொல்லு மதவானைக் கோடுங் கொடியவிறன்
மல்லுந் தொலைப்ப வடமதுரை வந்துதித்த
செல்லுருவ மன்னன் றிருவுதரங் காண்மினென்று
சொல்லும் பிரானுதரம் போற்றினர் தூயோரே.

21. சங்கக் குழையரன்கைச் சாபந் தவிர்ந்திரைக்கும்
பொங்குகடலேழும் பொடிசெய்து வந்தபிரான்
செங்கமலை தங்குந் திருமார்பு காண்மினென்றான்
பங்கமில்லா மார்பழகு கண்டார் பரிவோடே.

வேறு.

22. பெருத்தோங்கு நாற்றுவர் மாளப் பிறந்த
குருத்தோங்கு நான்மறைக் கோவலர் குட்டன்
றிருத்தோளிருந்தவா காணென்றான் றோள்கள்
கருத்தோங்கு மன்பர்கள் கண்டார் களித்தே.

23. சூழவிசும்போடுமுன் றொல்லுல குண்டவன்
ஆழியுஞ் சங்கு மடங்கு கரங்களை
யேழையர் காண்மிக்க ளென்றவன் கைத்தலம்
பாழிய மன்னவர் கண்டு பணிந்தார்.

24. பெருக்கண்ட முட்டிப் பிறங்கிய பொன்ன
வுருக்கண்டங் கண்டே யுலகுமுண் டான்றன்
றிருக்கண்டங் காணென்ற சேய்களங் கண்டு
கருக்கண்டங் கண்டனர் கற்றறிந் தோரே.

25. முன்றெண்டை தண்டாமன் மூவுலகு முண்டவன்
செந்தொண்டை வாய்காண்மி னென்றுபின் செப்பமுன்
றன்றெண்டு தானே சகியாய்ப் பிறந்தவ
னின்றொண்டை வாய்கண்டி யாவர்களு மின்புற்றார்.

26. பூக்குந் திருவுந்திப் பூவை நிறத்தமலன்
வாக்கு நயனமும் வாயுமுறு வலுஞ்சீர்
மூக்கு மிருந்தவா காணிரென்றான் முகத்தி
லாக்குமதுவதுகண் டந்தணர்கள் வாழ்த்தினர்.

27. திங்கள் வதனத் திருவனைய தேவகிபாற்
றங்கிப் பிறந்தாயர் தன்பால் வளர்ந்த பிரான்
செங்கமலக் கண்காண்மின் சேயிழையிரென்றவர்த
மங்கமலக் கண்கண் டனைவர்களும் வாழ்த்தினர்.

Koviloor Digital Library

28. நெருப்புருவத் தான்சாப நீக்கிவரு நீலப்
பொருப்புருவங் கொண்டவிறை பூமகடன் கேள்வன்
றிருப்புருவங் காண்மினென்ற செல்வன் புருவத்
திருப்புருவங் கண்டாங் கிமையவரும் வாழ்த்தினர்.

29. அகரத் தனிச்சோதி யாயர்கள் கோமா
னுகரத் தினுளை யுறத்திற் றறித்தான்
மகரக் குழையிரண்டுங் காண்மினென்ற வள்ளல்
பகர வரியகுழை பார்த்தமரர் வாழ்த்தினர்.

30. உற்ற புவன மனைத்துமுதிப் பித்ததனுட்
சிற்றிடைத் தேவகியார் சீரார் வயிற்றுதித்தா
னெற்றி யிருந்தவா நேரிழையீர் காண்மினென்று
னெற்றைப் பிறைநுதல்கண் டுத்தமர்கள் வாழ்த்தினர்.

31. ஆராயும் வேத மயர் வெய்த வண்டர்கையி
லோரா ரனை கயிற்றாற் கட்டுண்ட வெம்பெருமான்
சீரார் குழல் காண்மி னென்றான் றிருக்குழல்கண்
டோரு முற்றுரு முண்மகிழ் வோடாடினர்.

வேறு.

32. இவ்வண்ணம் பாத மாதியாய்க் கேச மந்தமா யிலங்கு மெய்ஞ் ஞான
மெய்வனைக் குழவி யவையவச் சிறப்பை மேதினியுள்ளவர் தமக்கு
மைவனத் திறைசேர் புதுவைமா நகரின் மறையவர் மகிழ்வொடு முறைப்பப்
பொய்வனத் துயரைக் கடிபவர் பலரும் புகுந்தனர் முகுந்தன தகத்தில்.

33. ஆணவந் திரண்டூ னுருவெடுத் துலாவு மைம்புல வேடர்களணி யாம்
பூணவம் பூண்டு பொய்ப்பரி மீதாய்ப் பூமியைப் பொடிசெய்வார் செயலைக்
காணவந் தவரைக் காணவந்தவர்க ளுடம்பெலாங் கண்ணிலா கையினு
லூணவ முறக்க மவம்பிறப் பவமென் றுளங்கசிந் துருகிநைந் தொசிந்தார்

Koviloor Digital Library

34. எண்ணிரின் றிறைஞ்சிப் பாலனை நோக்கி யிரங்கினர் வாக்கினு
லிசைப்பார்
புண்ணியக் கொழுந்தோ நான்மறைக் கொழுந்தோ
போதத்தின் பொலிசுடர்க் கொழுந்தோ
வெண்ணிய சாந்தி தருமெழிற் கொழுந்தோ விசைப்பதோர்
கமையருட் கொழுந்தோ
விண்ணிய லமுதின் சுவைதிரண்டதுவோ வேதியர்
தவந்திரண்டதுவோ

35. தந்தைதாய் செய்த தவப்பயன்றானே தத்துவத் துற்றமெய்ப்
பொருளோ
விந்தமா நிலத்தோர் செய்தவப் பயனே விலங்கு வானவர்
செய்ததவமோ
கந்தநாண் மலரோன் வாசவ னக்கன் காண்பரும் பரஞ்சுட
ரொளியைத்
தந்துநா முய்ய வந்ததோ ருருவோ வென்றென்று சாற்றி
வாழ்த்தினரால்.

36. இப்படி படியிற் பாலனைக் கண்டார் யாவரு மிரங்கி நின்றேத்த
மைப்படி கண்ணார் மாதர்கள் பலரும் மகப்பெறு பற்புமைத்
திருவு
மெய்ப்படிந் திலங்கு குழவி யோடளாவி மிகு மனு பவ
விளையாட்டின்
கைப்படிந் திலங்கும் பருவமோர் பத்துங் கருமுகிற் குரைத்
தவற் குரைத்தார்.

37. சிருடைக் குழவி யினையடியாகி திருமுடி வரையினி லணியா
மேருடைச் சதங்கை சுட்டிமற் றிதனுக் கிடையிடை
பூண்பன கமலத்
தாருட னணிந்து வளருநாளொருநாட் டையலார் தப்பரா
வமுதைக்
கூரிய தவத்தோர் செவிப்புல னிறைப்பீர் கொள்ளுமி
னமுதெனக் கொடுத்தார்.

Koviloor Digital Library

38. இன்னமு தருந்திச் சவுள நான் மறைக ளிசைத்தவர்
செய்துமுப்புரிநூ
றன்னையு மந்நூ லறைந்தவப் படியே தரித்துமா லூரிமுஞ்சி
தரித்து
மன்னிய பிரமசாரியாய்ப் புவியில் வாழுநாண் முழுவதும்
வாழ்வா
ரன்னம தூர்தி தாதையா ரடிமை யாகுநா மென்பதை யறிந்தார்

39. அத்திற மறிந்து வடபெருங் கோயி லுடையவ ரடியிணை
வணங்கி
யெந்திறஞ் செய்தா லிவருள மகிழு மெனவிறை திருவவதார
மெய்த்திறத் தாரின் மூன்றினிற் கஞ்சன் விறல்கெடப் பிறந்
தவர் தமக்குச்
சித்திர மாலா காரர்தம் பூவிற் றிருவுள மகிழ்தல்சிந் தித்தார்.

40. அதுவலா வடிமைத் திறத்தினுக் குரிமை யிலதென வகத்தினுட்
டெளிந்து
மதுமலர்த் துளதி மல்லிகை யலரி சண்பகம் வளர்மதுப் பிச்சி
புதுமதுப் பொங்கி வளர்கழு நீர்கள் செவ்வந்தி புகறரு கமல
மிதுவது வென்று திறைவனுர் சாத்தற் கிசைவன நறுமலர்
யாவும்.

41. ஆக்கிடு நந்த வனங்கள் பற்பலவு மணிதிகழ் பொய்கைகள் பலவு
மாக்கிமற்றதனு ளலர்மலர் போக்கியரும்புவிட் டப்பொழு
தலரும்
பூக்களைத் தெரிந்து புழுக்கடி போக்கிப் பொய்யிலா மெய்யனுர்
புரைதீர்
மூக்கிலம் மணஞ்சென் றணைந்திடா வண்ணமூடி வாய்புதைத்து
முக்குணத்தில்.

42. துன்பநல்கிரண்டுந் துடைத்துமெய்ஞ்ஞானச் சுடர்தரு
சாத்திகத்துணிவா
லன்பனுர் திருப்பூக் கூடையின்முன்ன மறைந்தசீர் நறுமல
ரமைத்து
முன்பினுர் கூடை யிரண்டொருகோலின் முறையினுற்
கோத்தவைகாவி
யென்பெலா முருக வானந்தவாரியிருகணு லிடையரு தொழுக.

Koviloor Digital Library

43. பங்கய வடிபேர்த் திடுந்தொறு மதனுட் பட்டபுற் பசுமை
கொண்டோங்கப்
பொங்கிய சாமு மசாமு முருகப் பூமகன் மனமொடு வாக்கு
மங்கமுங் குழைய நடந்தவர் கிடந்த வச்சுதன் வடபெருங்கோயி
றங்கிய திருமா றிருவுள முவப்பத் தடமலர்த் தார்பல
சமைத்தே.

44. பகலொரு சாமங் கழிந்தபின் னொளிக்கொள் பரஞ்சுடர்
வடபெருங்கோயிற்
புகலருங் கருணை யிறைவனை வணங்கிப் பூமலர்க்காவினிற்
புகுந்தே
யகலம துடைத்தாய் நொய்யாதாய்க் கைசேர்ந் தழகுறு
கொட்டவ னெடுத்து
சகலரு மிரங்க விருநிலங் குடைந்து தட்டுற நிரத்தியத் தலத்
தில்.

வேறு.

45. மருவேரு மல்லிகையுஞ் சண்பகமும் வளர்துளவு
மிருவேலி தருதருளி மிலாமிச்சி னெழின்மூடுங்
கருவேரை யறுத்தபிரான் கயிங்கரிய முதிர்ச்சிதருந்
திருவேர்வி லானந்தக் கண்ணீரிற் சேறு செய்தே.

46. வைத்து நன்னீ ருறப்பாச்சி மாயவிடை மடைமாறுப்
பத்தியினோர் மடைமாற்றிப் பகற்பொழுதைக் கழித்ததற்பி
னெய்த்தநறு மலரந்தித் திருமாலை நேயத்தாற்
பைத்தபாம் பணைக்கிடந்த பரமனுக்குச் சமைத்தளித்தே.

47. மங்குறோய் மணிமாட வடபெருங்கோ யிலர்தமக்குப்
பொங்குமதுப் பொழிகாவிற் புகுந்துபணி செய்வதற்குக்
கங்குலெனத் தடைசெய்த கயிங்கரிய விரோதியை நொந்
தங்கமிடிந் திருந்தாழ்வா ரருணவுதை யத்தெழுந்தே.

48. நீராடிக் கற்பனையா னியமத்தின் குறைமுடித்துங்
கூராழி சங்கங்கைக் கொண்டபிரான் றனைவணங்கிப்
பாரோரும் விண்ணோரும் பணிந்தேத்தப் பசுந்துளபத்
தாரேறு மெழிற்கூடை தாங்கி நந்த வனஞ்சார்ந்தும்.

Koviloor Digital Library

வேறு

49. சிலபகல் கடத்தினூச் செயல்கண்டு புதுவை மன்னும்
புலவர்களிவரை வாழ்த்திப் பூங்கழ லிறைஞ்ச வன்னூர்
மலமறுத் திறைக்காட் செய்யு மதியளித் தவர்பான்மாறு
நலமரு ளாழி சங்க நற்பொறி நல்கி யாண்டார்.

50. எருடைத் தொண்டரோடு மிலங்கை செற் றவற்கு நற்பூத்
தாருடன் சமைத்து மாயன் றாளிணை வணங்கு ந்ாளிற்
பார்முழு தாளு நீதிப் பாண்டியர் குலத்திற்கொண்டு
சீர்பெற வவனிகாக்குஞ் சீவலதேவ னென்றோர்.

51. உத்தன்னவன் மதுரை மன்னிச் சிறந்தர சாளுநாளின்
மன்னுமங் நகரினுள்ள மாந்தர்சட் கரசாலெய்து
மின்னனு மிசமுங்காண வேண்டுமென் றிராக்காலத்தப்
பொன்னகர் வீதியெங்கு மொருவனுய்ப்போய்மீள்போதில்.

52. திருநகர் காவலாளர் செழுமணிப் பாரிபோட்டு
வருபவ ரெதிரே மன்ன மன்னவன் மறைந்தோர்நீதி
யருமறை யந்தணாளன் றிண்ணையின் மறைய வாங்கே
யொருவனோர் மூச்சனுகி யுறங்குவா னுயிர்ப்பக்கேட்டான்.

53. கேட்டமெய் நீதி மன்னன் கிளரொலிப் பாரிக்காரர்
கூட்டமவ் வீதி நீங்கக் குவலையந் தாங்குங்கையிற்
பூட்டிய வுடைவாளோடும் புகுந்ததி னுறங்கு கின்றான்
மாட்டணைந் திருந்தானூர் கொலிவனென மனத்திலெண்ணி.

54. இருந்தமன் கிடந்தான்றன்னை யெழுப்பி நீ யாவனென்று
திருந்துமின் னுறையாற் கூறத் திண்ணையிற்றுயில்கொள்வோனும்.
வருந்துயில் யாவு நீங்கி மறையவ னுகு நானென்
றருந்தவன் கூறமன்ன னவனொடு மறைவதானுன்.

55. வேதியர் குலத்து ளீரேல் வெறுமையுற்றிவணந் துஞ்சு
நீதியே தறைக வென்றான் மன்னவனெறி நின்றோங்கு
மூதிய மறிந்த பார்ப்பா னுரைப்பனுன் கங்கை யாடி
யாதியெம் மிராமசேது வாடுவே னணைந்தேனையா.

Koviloor Digital Library

56. என்றவ னுரைப்பக் கேட்டாங் கிருநில முழுது மாளும்
வென்றிவேல் வேந்தனந்த வேதியன் றன்னை நோக்கி
நன்றிசேர் கதைகள் போமேன வில்கவென் றறையப் பார்ப்பா
னொன்று நானறியேனையா வுளதொரு கிரந்தமென்றான்.

57. அங்கதை யருளு வீரென் றரசனு முவந்து கூற
வோங்குசீ ரந்தணாள னுரைத்தன னுரைப்பவையந்
தாங்கிய மன்னா மன்னன் சாற்றுவீர் பயனையென்றான்
மூன்றாரு மறியும்வண்ண மொழிந்தனன் றெளிந்தசொல்லால்.

58. மாரியின் காலந் துய்ப்பான் மற்றுள காலத் திட்டுங்
கூரிய விருளிற் றுய்ப்பான் கொழுஞ்சுடர்ப் பகலிலீட்
சீரிய விளமை தன்னின் மூப்புக்குஞ் சிறப்பாலீட்டு
மேரியல் பதனுலிம்மை தன்னிலே மறுமைக் கீட்டும்.

59. என்பதை யாயன் கேட்டாங் கிரங்கி நைந் துருகி யந்த
வன்பனை யுடன் கொண்டேகி யளவறு நிதிய மீந்து
புன்புல னற்றே யேகென் றனுப்பியப் பொழுதே தானுந்
தன்பெருங் கோயில் புக்கான் றடமணி வயிரத் தோளான்.

வேறு.

60. வந்துமனை புக்கபுவி மன்னவர்கண் மன்ன
னந்தண னுரைத்தபொரு ளாய்வுறுமெய் நாவின்
முந்தவரு மொன்றுட னிரண்டுமுடி வெய்து
மெந்தவகை யான் மறுமை யெய்துமென வெண்ணி.

61. இருந்தன னிருந்துழி யிருட்பொழுது மாயா
வருந்துயரு மாயவெழி லாதவ னெழுந்தான்
றிருந்துநியமத் தொழில்கள் செய்துமறை வாழ்வைத்
தருந்தவர்கள் கொள்வபல தானமு மளித்தே.

62. அண்டமுக டுடுருவி யாசற நிமிர்ந்த
மண்டல மிலங்குமணி வாயிலுற மன்ன
னெண்டரு திசைப்புவியின் மன்னவ ரிறைஞ்சத்
தண்டரள மார்பனுயர் தானையர் வணங்க.

Koviloor Digital Library

63. எய்தியரி யாசனம தெய்தியிட சற்ற
வைதிகர்க ளாசிநெடு மன்னவெழின் மன்ன
னுய்திற மறிந்திடு முபாயமவை யெண்ணிச்
செய்திற மறந்துவளர் தென்னவ னிருந்தான்.

வேறு.

64. பூங்கழற்கால் விறற்றென்னன் புக்கிருக்கு மவையின்க
ணாங்கவற்குப் புரோகிதனு மச்சுதன் சீரருள் வடிவைத்
தாங்குமெழின் மனத்தினனுய்ப் தத்துவனைப் பிரியாதே
யோங்குமடி யவராலும் பழவடியா னெனுமுறையில்.

65. உற்றவனுய்த் தென்னவனுக் குயிர்த்துணையா யறமன்றி
மற்றறியா நிலையானுய் மறைநாலுங் கற்றவனுய்
செற்றமிலா மனத்தினனுய் செல்லநம்பி யெனுநாமம்
பெற்றவனு யெதுவரினும் பேராத நிலையானுய்.

66. உளனொருவ னவன்வந்திட் டோங்கியசீர்த் தென்னவன்முன்
னளவிறந்த மகிழ்ச்சியொடு பணிந்தருகோ ராசனத்திற்
றுளவநெடு மணிமுடிமா ஞேத்திரம்வாக் கேத்தவஞ்சா
வளவனுக்குஞ் சேரனுக்கு மன்னவவாழ் கெனவிருந்தான்.

67. பொய்மையற்ற மறையோனைப் பூபால னுறநோக்கி
மைமையெனும் புலைச்சமைய மயக்கிடையிற்படாததடியே
னிம்மையிலே மறுமைதனக் கியற்றுவதைப் படிபொன்று
மெய்மையைநா னடையுநெறி செல்வநம்பி விளம்புகென்றான்.

வேறு.

68. முத்திசித் திக்குமாறு மொழிகென மன்னன்கூறு
மத்திரு மொழிகேட்டுள்ளத் தந்தணனன்புகூர்ந்து
தத்துவமறிய வேண்டு மன்னவர் தலைவ வென்றான்
மெய்த்திற மருள்வார் யாரென் றரசன்வே தியனைக் கேட்டான்.

69. படிமுழு தாளுஞ் செல்வம் புன்னுனிப் பனியென் றெண்ணி
முடிவிலாப் பேரா னந்த முத்திநீ விரும்ப லாலே
விடிவிலா மாயா கங்குல் விடியும்வீ டெய்தக் காட்டு
மடிகள்வே தாந்தம் போனு ரருள்வர்நீ யஞ்சலென்றான்.

Koviloor Digital Library

70. வேதியனஞ்சலென்ற மெய்ம்மொழி விளக்கங்கேட்டுப்
பூதல முழுது மாளும் புண்ணியன் மகிழ்ச்சி தாங்கி
யோதுமெய் வேத வாண ருறைவதெத் தலத்தி லன்னோர்
பாத தாமரைக ளான்போய்ப் பணிவனீ பகர்வா யென்ன.

71. மன்னவர் பெருமான்கூற மாசறு செல்வ நம்பி
யென்னுமம் மெய்ம்மை யாள னியம்புவா னிலங்கு நீதித்
தென்னவ பூமி யெங்குந் திரிந்துநாங் காண்போ மென்றோ
லன்னவர் வெளிவா ராரோ ருபாயமிட் டழைப்போமென்றான்.

72. சென்றுநாந் தேடி யாடுந் தீர்த்தமின் னன்பினாலே
யின்றெனிலாடி யுய்ப் யென் றெனக்குமீண் டெய்து மாகி
லொன்றதி னுறுதி யுண்டோ வுரைத்தி யவ் வுபாய மென்றா
னன்றுகே ளென்று செல்வ நம்பியு நவில லுற்றான்.

73. ஆதியம் பரமன் மாயா விநோதத்தா லனந்த கோடி
நீதிகொள் சமைய மாக்கி நின்றன னதிற்றா னொன்றா
யோதிய சமையத் துள்ளோ ரொன்றை யொன்றொவ்வா
தென்பர்
வேதமு மவணஞ்சொல்ல விதித்தவம் மெய்ம்மையாளன்.

74. அத்திரு வேத நீதிச் சிரத்தினி லமரு மந்த
மெய்த்தவ னிலையைத் தரங்கும் வேதமு மறியமாட்டா
வுத்தம குணத்தினானே யோங்கிய பரம சோதிச்
சித்திர வருள்பெற் றோங்குத் திறத்தினர் தெளியக் காண்பர்.

75. அதுவலாற் சமையத் தோர்க ளவனருட் சமையர்தன்னை
யிதுவது வாகுமென்றே யெடுத் தெடுத் தியம்பாநிற்பர்
பொது வென்பர் சிலர்களந்தப் பொய்ம்மையைத் தெரிக்கமாட்டா
துதுபதர் மணிபோற்றோன் றியுமம் மணியோடொத்தே.

76. அன்றது காணவேண்டி லறைதரு வழிநோக்கி
நன்றுதிதி ரண்டுங்காணு நன்மையர் தன்மைபோலே
வின்றுநாம் பரத்தின் மேன்மை யிதுவென வறியவேண்டி
லொன்றிய மறையோராதி யுரைத்தபல் சமையத்தோரும்.

Koviloor Digital Library

77. வருகவென் றழைத்து நின்பொன் வாயிலிற் கிழியைத்
தூக்கி
யருமறை முடிவில் வைகு மாதியம் பர மீதென்னப்
பொருவறு முறையால் வென்ற புண்ணியர் கொள்கவென்று
லொருவரே யறுப்பர் வேண்டா ரெனினுமவ் வுண்மைகாட்ட.

78. ஆதலானினக்கு நின்சீ ரவனியோர் தமக்கு மன்னு
வோதுமிப் பரமீதென்ன வுணர்ந்ததை யடைதலாகு
மாதவத்தோரும் வாழ்வ ரென்றனன் மறைவ லாளன்
பூதலத் திறைவ னேலை புறையறு பூமி யெங்கும்.

79. ஒன்று கற்றோர்க ளாதி யோங்குநான் மறையுமோதிச்
சென்றதின் முடிவு கண்ட சின்மயத் தோர்க ளந்தம்
பொன்றலின் முத்திநீதி புகலவல் லார்களெல்லா
நன்றிசேர் மதுரை நண்ணி நவிலுநங் கடவுண் மேன்மை

80. இதுவென வருளி யென்னை யிலங்குநுங் கடவுளார்த
மதுமலர்க் கமலபாத மன்னவைத் தென்னுற் கட்டும்
பொதுவுறு கிழியுங் கொண்டு புகழ்கொண்டு போவானின்றே
கதுமெனப் புகுவிரென் னும் வாசகங் கழறிவிட்டான்:

81. தூதுவர் கையினீதி தொடர்ந்தவா சகங்கொள்ளோலை
மாதிர மெட்டுமுட்ட மன்னவன் விடுத்தபின்னைப்
பூதல முழுதுங்காணும் பொற்கிழி பொருந்தச் சேர்த்துக்
கோதறு நெறியான் மன்னுங் கோமுனை வாயிறன்னில்.

82. கட்டினன் தூதரோலை காசினியுள்ளோர்க்கெல்லா
மிட்டனர் தலத்துளோரும் யாவரு மறிந்தா ரன்றே
வட்டமா மேருவொத்த மணிமதின் மதுரை தன்னி
னுட்டெள்ளி வுடையா ரெல்லாந் தூதுவ ருடனே சென்றார்.

83. சித்தர் புகுந்தார் தேவர் மகிழ்ந்தா
ரத்திரம் வாழ்வெனு மந்தணர் வந்தார்
புத்த ரடைந்தார் சைவர் புகுந்தார்
மத்தமுறும்மீ மாங்கிசர் வந்தார்.

Koviloor Digital Library

84. மாயா வாதியர் வந்து புகுந்தா
ரோயா தேமது வுண்டு தமைத்தா
ரையா வாயிக லக்கணம் வந்தார்
தேயா வஞ்சவை சேடியர் சென்றார்.

85. ஆசறு சாங்கிய யோக ரணைந்தார்
பாசுப தத்தவ ரும்பதி யுற்றார்
மாசில ளுமென மாவிர தத்தார்
தேசு பெறுபடி கூடல் செறிந்தார்.

வேறு.

86. ஆருயிர் கொல்லோ மென்னு மருகரு மதுரை சார்ந்தார்
தேருமெய் யன்பில்காளா முகவருஞ் சென்றுசேர்ந்தார்
பாருறு மின்ப மல்லாற் பரமெனல் பழுதா மென்றே
யோருல காயதத்தோ ரெனுமவ ருடனே சென்றார்.

87. நல்லியற் கூடறன்னி லிவரிவர் நண்ணு நாளில்
வில்லிபுத் தூரின் மாயன் விட்டுணு சித்த னென்பா
னெல்லியம் பொழுதிற் றுஞ்சு மிடத்தினி லொருநாளெய்தி
யல்லியங் கண்ணு னேக்கி யருளளித் தன்பன் மாட்டில்

88. இருந்தவர் திருப்பேர் சொல்லி யெழுப்பினு ரெழுப்புங்காலை
யருந்தவ முடையார் துண்ணென் றெழுந்திருந் தருகினேக்கக்
கருந்தட முகில்போன் மேனிக் கருணையங் கடலைக்கண்டார்
குருந்துறைந் தவனே போற்றி யெனக்குழைந் தடியில்
வீழ்ந்தார்.

வேறு.

89. வையமுழு துண்டவர் பதங்களில் வணங்கி
நைவுறு மனத்தின ரெழுந்து நவையில்லாக்
கைதலை குவித்தெழில்கொள் கண்கள் புனல்சிந்தச்
செய்திற மறந்துருகு சிந்தையரு நின்றார்.

90. நின்றநெறி யன்பனிலை கண்டு நிகரில்லா
வொன்றுளது கேளென வுகந்திறை யுரைப்ப
மன்றல்கம ழுந்துளப மாலைபுனை மார்பா
வின்றறியும் வண்மை தியம்பிடுக வென்றான்.

Koviloor Digital Library

வேறு

91. நன்னெறி மதுரை தன்னின் னற்பெருந் திசையுங் காணத்
தென்னவன் விகாரத்தாலே திரண்ட பொற்கிழி யொன்றுக்கி
மின்னவிர் முடியான் றன்சீர் விளங்கிய வாசறன்னின்
முன்னுறத் தூக்கி வைத்தான் முகுந்தனுர் மதலாய் நீபோய்.

92. அறுத்திவண் கொணர்வாயென்ன வச்சுதனருளிச் செய்ய
வெறுப்புடன் விருப்பொன்றில்லா விட்டுணுசித்தன் கூறுங்
கறுத்த மாமுகிலே வாதில் வென்றவர் கைக்கொளென்றே
யிறுத்திஞன் மன்னன் வாய்மை நீணில மதனிற் றெண்டன்.

93. வதுரைத் தறுப்பபே னெந்தா யிருகையா லெடுத்து வெட்டு
நீதிமன் வெட்டிக் கோட்டா னிறை பெருந்தழும்பைக்காட்டி
வேதநிச் சயங்காட்டாதே விமலனே யறுக்க லாமோ
பூதலமாரு மன்னன் பொறுப்பனே புகல்வா யென்றான்.

94. அன்பரிவ்வாறு கூற வச்சுதனவரை நோக்கித்
துன்பிலா மன்னன் கேட்ட சுருதியின் முடிவைக் காட்ட
லென்பரம் வாயிறன்னி லிலங்கு பொற்கிழி கைக்கொள்ள
லுன்பரமேகா யென்றாங் குரைத்திட வுரைப்பர் தொண்டர்.

95. பூகல முழுதிலுள்ள புலவர்கள் சபையி னுள்ளே
மாதிரம் பொருந்து திண்டோண் மன்னவர் மன்னன் முன்னே
யோதுமோரெழுத்தும் போகா வூத்தையே னுடலந்தாங்கி
நாதனே வெட்கமின்றி நண்ணுத னலனே வென்றார்.

96. என்றிவா றறையக் கேட்டங் கிறை பெருமுறுவல் செய்து
நன்றிகொள் வேதநான்கு நவிலுஞ் சாத்திரமோ ராறு
மின்றெனை துடைமையாகு மென்னே நீ யுடையை யானு
லொன்றுனக்கரிய துண்டோ வுத்தம குணத்தினனே.

97. என்னமின் னவிருநேமி யெம்பிரா னருளிச்செய்யப்
பொன்னடித் தலத்தில் வீழ்ந்து புண்ணியக் கொழுந்தே யன்னர்
தென்னவன் மதுரைதன்னிற் றிருமகனுதை னின்றே
மன்னுவான் விடைகொள்கின்றேன் வாழியென்றெழுந்து
வாழ்த்தி

Koviloor Digital Library

98. நின்றவர் தம்மை யேகு நீ யென வனுப்பித் தாமுஞ்
சென்றுதங் கோயில் சேர்ந்தார் திருமரு மார்பன் று
நன்றிகொள் பெரியாழ்வாரு நற்றவத் தோர் கடாங்கப்
பொன்றிகழ் சிவிகையேறிப் பூபதி கூடணேக்கி.

99. எனைனோன்பர் சூழ விமையவர் வணங்கி வாழ்த்த
மாகம்திலங்குஞ்சோதி மதிக்குடை நிழற்றச் சீர்கொள்
பூகமார் மருதவேலிப் புதுவைமாநகர நீங்கிப்
மேகமே கரவா யென்ன விழிவழி யருவி சோர.

வேறு.

100. கற்குழைய மரங்குழையக் கானில்வளர் விலங்கினத்தின்
விற்குழையப் பறவைகளின் மெய்குழைய மேதினியிற்
புற்குழைய வேதாந்தப் பொருள்குழைய மெஞ்ஞானச்
சொற்குழைய வேகுமவர் துலங்குவனம் பலகடந்தே.

வேறு

101. சென்றனர் மதுரை நோக்கித் தென்றிசை வாயில் சேர்ந்தங்
கன்றதிருவுறையுங்கூட லழகிய பெருமாடன்னை
யொன்றிய மனத்தராகி வணங்கினு ரோவா தன்பா
னின்றிருந் தவரை நோக்கி நிலவுசித் திரமதானுர்.

102. இமைத்திலர் விழிகள்வாயா லிசைத்திலர் துதிகணின்ற
தமைச்சில கடிகைப் போது முணர்ந்திலர் தரணிதாங்கும்.
கமைப்பெரு முலகின்மேற்சென்ற கருத்தினைத்திருத்தி
வாக்கால்
வெமைத்தொடர்ந் தெடுத்தாட் கொள்வீரென் செய்கேன்
கைம்மாறென்றுர்.

103. அவனை நின்றுழ்வார்கூற வண்டமுண்டண்டத்துள்ளே
யுவணமதேறி விதியுலாவுவாரிசைப்பாரந்தோ
விவணமோரன்பா னைக்கி விகபரந் திலதென்றெண்ணி
மவனை மற்றவரே சென்றவ் வாதினை வெல்வீரென்றுர்.

Koviloor Digital Library

104. என்றிறை யருளிச் செய்ய விருகணீ ரருவி சோர
நின்றவ ரிருந்தார் தம்மை நீணிலத் திறைஞ்சி வாழ்த்தி
சென்றனர் வீதியூடே தென்னவன் செயலே தென்னிற்
குன்றென வுயர்ந்த நீதிக் கோமுனை வாயிலெய்தி.

வேறு

105. வாசம லர்த்திரு மங்கையும் வாணியும் வீரம டந்தையும்
நேசமு டன்புவி மங்கையு நேர்பெற நேமி தரித்தவன்
றேசுடை வானவர் கோனெனச் செல்வமி குந்துசி றந்தசிங்
காசன மீதிலி ருந்தன னண்டரும் விண்ணி னெருங்கினர்.

106. நன்றித ருஞ்செல்வ நம்பியு நான்மறை யாளரு மன்பருஞ்
சென்றுயர் தென்னனி ருந்ததோர் சிரிய வாசன மாடுற
வன்றரு ளெய்தவி ருந்தன ராசறு மன்னர மைச்சரு
நின்றனர் முத்திவி ரும்பினோர் நேர்பெற வந்து நிரைத்தனர்.

107. போக்குமி குத்துமுல் புத்தரும் போதம கன்றவை சேடரு
நக்கனை நம்பிய சைவரு நன்றிகொள் சாங்கிய யோகருந்
தொக்குல காயத வீணருந் துன்புறு மாவிர தத்தரு
மெக்கரு மத்தினு மையுற வேயுறு மாற்கரு மெய்தினர்.

108. மாயைத ரும்பெரு வாதரும் வஞ்சம்வி டாவரு கோர்களு
மாய்வறு வாமியர் கூட்டமு மாதிய வாதிய ரெய்தினு
ரேயுறு மவ்வவை யின்கணே யேழுலகுண்டவர் தொண்டராய்த்
தூயது யந்தைவி ளக்கிய சுந்தர வந்தனர் தோன்றினர்.

109. தோன்றிய வன்பரை நோக்கினன் றூமறு வார்செல்வ நம்பியு
மூன்றுல குண்டவர் தொண்டனு ரெய்தின ரென்றுமொ
ழிந்திட
வூன்றுமெய் யன்பின்மன் னுேக்கின னுத்தம னர்வண மாய
னய்த்
தோன்றினர் தென்னவன் கண்கனோர் துண்ணென வோடி
யெழுந்தனன்.

வேறு

110. எழுந்திருந்த விறற்றென்னன் செல்வநம்பி யுடனேகிச்
செழுந்தவனை யடிவணங்கிச் சீரியநான் மறைக்குமொரு
கொழுந்தென்னத் திருவுருவங் கொண்டபெரி யாழ்வாரும்
விழுந்திறைஞ்சு மன்பர்களை விரைந் தெடுத்தார் சீர்வதிப்ப.

Koviloor Digital Library

111. கொடியகொடு வினைக்கிடாய்க் கூற்றுவன்கைப் பட்டுழலு
மடியனேற் கருளல்கி யாளவந்த திருவுருவோ
படிமிதின் மாமாயை பாறவந்த பரஞ்சோதி
வடிவிதுவோ வெனமன்னன் மகிழ்ந்துரைத்தான் குடன்கொடுபோய்.

112. சிரியசிங் காசனத்திற் றேவவினி திருத்தியென்று
னேரியனுன் மறைவல்லா செழிலரியா சனத்திருந்தார்
கூரியமெய் யறிவில்லா வாதியர்கள் குழாத்திடையிற்
றேரிலுறு மிரவியெனச் சென்றவர்தே வர்கள்கண்டார்.

113. வாசவனு மதுகண்டு மற்றிவனுற் றென்னவனம்
மீசனடி யறிந்தடைவ னிவையுலக்க வேண்டுமெனத்
தேசுபொலி சூர்குருவைச் சென்றுசிங்கா சனத்திருந்த
மாசிலான் றனைவெல்க மானுடனு யெனவிட்டான்.

114. இந்திரன்சொற் பணியாலே யிருநிலத்தில் வியாழகுரு
வந்துமா னிடவடிவாய் மன்னவன்முன் றோன்றிறு
னெந்தகா டெவ்வூர்நீர் யாவரதை யியம்புமெனச்
சந்திரன்சிர்க் குழக்துதித்த தார்வேந்தன் மகிழ்ந்துரைப்ப.

115. பொன்னுலகாள் பவன்குருசாற் போந்தவர்சென் றங்கிருந்து
மன்னவநீ கிழிகட்டி வாதிடைநின் றவர்கொண்மி
னென்னவுரைத் தனைபார்ப்பா னேதுசெயித் தவன்றுளிற்
றென்னவிழுந் தனையாதைச் செப்புதிநா னெனைச்செப்ப.

116. என்றுரைத்த வவ்வேலை யிருந்தசம யத்தவர்க
ளொன்றுபட வியாழகுரு வுடன்கூடி முடிவேந்தை
யின்றெமது முன்னுகை விருநிலத்தி லிறைஞ்சுவித்த
நன்றிதரும் வேதியரே கிழியறுக்க நாமுமென.

117. சன்னைசொல்லி யவன்பதத்திற் றுழ்ந்தமன்னை மிகவிகழத்
தென்னவனு மருகிருந்த செல்வநம்பி முகநோக்கி
யென்னையினிச் செய்வதென வியம்பியிடு மளவையினின்
மன்னவமற் றிவரவரை வெல்வர்வருந் தேலென்றான்.

118. எனவியந்து செல்வநம்பி யுரைப்பவிற வியல்வேந்தன்
மனமகிழ்ந்தாங் கினிதிருந்தான் வானவர்கோன் விடுத்தவனு
மனவயல்சூழ் புதுவைநக ரச்சுதனுர் விடுத்தவரும்
வினவரிய பரசமய தர்க்கத்தின் மிசைமூண்டார்.

Koviloor Digital Library

119. பரத்துவமே தறைந்துகிழி பற்றுமென்முன் வியாழமுனி
விரத்திநெறி நின்றவரும் விண்டுவென்று ரண்டார்குரு
வுரத்துமல ரயனென்று ஞெதவண்ணர் தொண்டரவன்
சிரத்தையான் கைகொடுத்த திறமறந்தா யோவென்றார்.

120. நன்றவ்வா றுனுறு நாரணனன் றேபரமன்
கொன்றைமுடி வைத்தருண வெற்பரென்றே கூறுதுநா
னென்றனன்வா னவர்குரவ னேமுலகு முண்டவரை
யொன்றியசீர் மனத்துள்வைத்த வுத்தமனூர் நகைத்துரைப்பார்.

121. அறிவிலாய் முன்புகன்ற வயன்சிரத்தை யறுத்துரைத்த
மறியமருங் கரத்தரனூர் மற்றவினை போக்கியிடு
நெறியறியார் மலியிரந்து நெடுங்காலந் துயமாமுற
வெறியார்பூந் துழாய்முடியெம் விண்டுவன்றோ வதுதவிர்த்தான்.

122. இவ்வண்ண மிவர்கூற விமையவர்தங் குருவுரைக்கு
மெய்வண்ண முடைக்கால கற்பிதத்தில் விட்டதெனப்
பொய்வண்ணக் காலத்தைப் பரமென்முன் போக்கற்றான்
மைவண்ணப் பரஞ்சோதி தொண்டரிவை மறுத்துரைப்பார்,

123. காலமொரு மூன்றுமுடைக் கடவுளரார் கருத்தினிடை
மூலமுடி வறியாதாய் மொழிகவென வவன்மொழிவான்
ஞாலமிசை யிருணீக்கி நற்பொருளை விளக்குவிக்குங்
கோலவெழிற் கதிரொளியை யவன்பரமா மெனக்கொண்டே.

124. உரைத்தனனவ் வுரைகேட்ட வுத்தமனூர் முறுவல்செய்து
வரைத்தடந்தோள் விறன்மன்னன் மாமுகத்தை நோக்கியிவன்
றிரைக்கடலுட் டினம்பிறந்துஞ் செத்து முழல் கின்றவனை
யிரைக்குமறை காணாத பரமென்று விசைந்திடுமோ.

125. சொல்லாயென் றனராழ்வார் தொல்லுலகங் காத்தளிக்கு
மல்லார்திண் புயத்தென்னன் மதிகெட்டா ரெனவுரைத்தான்
கல்லாத சுரர்குருவுங் கட்டுரையற் றுங்கிருப்ப
வெல்லாருந் தங்கடங்க டெய்வமெழிற் பரமென்றார்.

126. அதுகேட்ட செல்வநம்பி யாழ்வார்த முகநோக்கி
யிதுவேனிப் புல்லருட னெம்பெருமான் விளையாடன்
முதுவேத முதற்பொருளை மொழிந்துவெளி யிடுகவென
வதுவேநங் கருமமென வாழ்வாராங் கெதிர்ந்தவரில்.

Koviloor Digital Library

127. சைவர்களாங் கரித்திரட்கோர் சாற்றுசிங்க வேறுனர்
பொய்யுடைய வாமிகளாம் புலியிருட்கா தவனுறை
ரையமுறு புத்தர்களா மாட்டினத்துப் புலியானுர்
மையலரு கப்பஞ்சின் மாகனலா ஞர்பிறராம்.

128. சற்பங்க டனைமாய்க்குங் கருடனெனத் தான்சமைந்தார்
நிற்பனசெல் வனவிரங்க நேமியான் றிருத்தொண்ட
ரற்புதமென் றமரர்குழா மிறைஞ்சவா ரணத்தந்தச்
சிற்பரத்தை யுலகுய்யத் தென்னவன்முன் கட்டுரைத்தார்.

129. கட்டுரையைக் கேட்டுமண்ணேர் கனன்மெழுகாய்க் கரைந்திடவிண்
டொட்டுயர்ந்த மண்டபத்திற் றாக்கியசீர்க் கிழிதாழ
வெட்டெழுத்துக் குறைவிடமா மாழ்வார்த மிருதாளிற்
பட்ட கிழிதனையறுத்துப் பாண்டியன்முன் பரிந்திட்டார்.

130. தென்னவனச் செயல்கண்டு திருவடியி னுற வீழ்ந்தான்
முன்னவனை யிகழ்ந்துரைத்த முழுமூடச் சமையத்தார்
மன்னவனு முறுவல்செய வந்தாழ்வார் பதத்திறைஞ்சப்
பொன்னகரத் திறைபவனியாற் போந்தவரும் போயினரால்.

வேறு.

131. இடிநிகர் முரச மார்ப்ப விமையவர் குழாங்க ளார்ப்பப்
படிமுழு தடைய வாளும் பாண்டியன் பரிவி னேடும்
மடியேனை னல்ல நீர வாளவந் தவரே யின்றிக்
கடிநகர் வலமாய் நண்ணிக் காட்சிதந் தருள்வீ ரென்றான்.

132. என்றசொற் கேட்ட போதி லீசனை நினைந்தாழ் வாரு
மொன்றதற் காமா காதென் றுரைத்தில ரொடுங்கி நின்றார்
சென்றெடுத் தவரை நீதித் தென்னவன் நீலக் கைக்குள்
ளொன்றென வுயர்ந்தயானை யெருத்தமீ துவப்போ டேற்ற.

133. பூதமோ ரைந்து மேத்த புரையறு மறங்க ளேத்த
வேதமோர் நான்கு மேத்த விண்ணவர் குழாங்க ளேத்த
வோதுமூ வுலகு மேத்த வோங்கிரு சுடரு மேத்த
மூதறி வுடைய மன்னன் சேனைகண் முழுது மேத்த

134. அந்தணர் குழாங்க ளேத்த வருமுனிக் கணங்க ளேத்தப்
பந்தணை விரல்சேர் செங்கைப் பாவையர் வீதிதோ றுஞ்
சந்தனக் குழம்பு சுண்ணந் தாதவிழ் மலர்கள் சிந்தி
யிந்திர விழாவ தென்ன விறைத்தனர் மணியும் பொன்னும்.

Koviloor Digital Library

135. மதிக்குடை நிழற்றத் தெய்வ மங்கையர் கவரி வீசக்
கதிக்குநின் றிறங்கு வோருங் காசினி யோருங் கண்டு
துதித்தெழ வேதுங் காலைச் சுடரொளிப் பரலோ கத்திற்
பதித்தபே ரருளோ டோங்கும் பரவசா னந்தநாதன்.

136. அந்தமில் பேரின் பத்தா ரடியரோ டமைந்த சோதிச்
செந்திரு மார்ப ராழ்வார் சிறந்தசீர்ப் பவனி காண
வந்தனர் கருடன் மீதின் மான்மறிக் கரனும் வையந்
தந்தநான் முகனும் போற்றத் தாமரைச் செல்வியொடும்.

137. மண்ணெலா மனிதர் செற்ற மறையவர் மறைகள் பாட
விண்ணெலா மிமையோர் செற்ற விரிஞ்சனு மரனும் போற்று
மண்ணலார் நித்தர் முத்த ரணியணி நிறைப்ப வாங்கே.
கண்ணெலாங் களிப்ப வான வேந்தனுங் கசிந்து போற்ற.

138. கண்டுயர் பெரியாழ் வாருங் கருத்தினி லிறுமாப் பற்பங்
கொண்டிலர் கொண்டல் வண்ணன் குளிர்மதி வதனங்கண்டார்
புண்டரீ கத்துள் வைகும் பூவையை மார்பிற் கண்டார்
தொண்டர்கள் குழாதைக் கண்டார் துணைவிழி யருவிசோர்வார்.

139. கருதுவார் கருத வாடுங் கருணையங் கடலார் மேனி
மிருதுவை யிளமை தன்னை மெய்யுறு குழைவை மார்பில்
வருதிரு வருளைக் கண்டு மண்ணவர் கண்ணே றுலே
பொருவரு முருவில் மாசு புகுமெனத் துணுக்கென் றஞ்சி

140. தன்னிரு விழிகள் சென்று சாரினும் பிழைக்கு மென்ன
முன்னுறப் பல்லாண் டென்று மொழிந்துகாப் பிட்டக்கோலம்
பின்னுறக் காண்போ மென்று பிரிந்தொரு திசையை நோக்கி
யென்னையாண் டருள்வார் பல்லாண் டெனுந்திருப் பதிகந் தன்னை.

141. ஆனைமே லிலங்கப் போட்ட வணிமணி தாள மாகக்
தேனையுந் தலங்க லான்றன் சேவடி செவ்வி மார்பிற்
கானையுந் தளத வல்லி கதிரொளித் திகிரி சங்க
மேனைய பிறவுங் காப்பென் றிசைந்தன ரிசைந்த பின்னர்.

142. நோக்கினர் திருக்கோ லத்தை நோற்றநோன் புடைய வன்பர்
வாக்கொடு மனமுங் கண்ணும் வள்ளற னுருவிற் பாயக்
கோக்கிளர் மதுரை யுள்ளோர் மன்னவன் கோதி லாத
பாக்கியச் செல்வ நம்பி யெனுமவர் பலருங் காண,

Koviloor Digital Library

வேறு.

143. உளங்கருணைச் சடகோப ருரைத்ததிரு வாய்மொழியில்
விளங்கியசீர் நெறிப்படியே விமலனருட் கருடன்மிசைக்
கிளர்ந்துபிர மன்சிவனென் றிவர்வணங்கக் கிளரொளியா
யளந்தெவரு மறிவரிய வச்சுதனார் வீற்றிருந்தார்.

144. அவ்வண்ணம் வீற்றிருந்த வருளுருவை யாழ்வார்கண்
டெவ்வண்ணந் தவஞ்செய்தேன் யானந்தோ வெனவழுது
மவ்வண்ண மிலாதவரு மலர்க்கரங்கள் சிரங்குவித்து
மைவண்ணப் பரனேகைம் மாறில்லே னெனவாழ்த்தி,

145. காராருந் திருவுருவின் கருணையினு ளமழிந்திட
டாராத காதலினு ரனுபவமுள் ளடங்காதே
கூராழி சங்கேந்துங் கொண்டலுக்குப் பாமாலை
சீராருஞ் சொற்றமிழாற் பாடவென்று சிந்தைசெய்தே.

146. மச்சமுதல் கற்கிவரை மண்ணிடையில் வந்துதித்த
வச்சுதனார் திருவுருவி லாயர்மனை வளர்ந்தவர்த
மெச்சுதிருக் கலியாண குணங்களுமெய் விளங்கியசீர்ப்
பச்சைமுகிற் பாலகனும் பருவத்தின் பலசெயலும்.

147. பாடுவான் சிந்தித்துப் பரிவோடு மிறைதிருத்தாள்
சூடுவா னினைந்தனரத் தோமில்லார் தஞ்சிரத்திற்
றேடுவார் தேடநின்ற திருமால்சி ரடிவைத்தா
னாடினர் வானவர்கண் மண்ணவர்க ளதிசயித்தார்.

148. சைவர்முதற் சமயத்தார் தத்தமக்காங் கடவுளரைக்
கைவிட்டா ரிங்கில்லா ரங்கில்லை யெனுங்கருத்தான்
மெய்வைத்தார் திருமால்சி ரடியார்தம் விரைமலத்தா
ணைவுற்றான் பாண்டியனு நாரணன்சீர் நலந்தெரிந்தே.

149. நின்றனனக் காலத்து நெடுமாலுஞ் சமயிகளை
வென்றவரே யின்றுமுதல் வேதக்கோன் பட்டார்பிரா
னென் றிசைக்கு மெழினும மியம்பினே மெனவியம்பிச்
சென்றனர்வான் றேவருடன் றெளிவிசும்பிற் சேர்ந்தனரால்.

150. பட்டர்பிரா னாழ்வாரும் பரஞ்சோதித் தடங்கடலா
மெட்டெழுத்தின் றனிநாத னேகியபின் மாகரியை
விட்டிறங்கித் தோற்றவரை வியன்மதுரை மன்னவனை
மட்டவிழ்பூந் துழாய்முடியா னடியவராய் மன்னவைத்தே.

Koviloor Digital Library

151. மனக்கருத்து முற்றுவிப்பான் வடமதுரை பிறந்தவர்வாழ்
புனத்துளப வனஞ்சூழ்ந்த புதுவைநகர் தனிற்போந்து
தினத்தினமு மருள்விளங்குந் திருப்பல்லாண் டாதியாய்க்
கனத்தவருட் சென்னியோங் கந்தமாய்க் கலைதெரிந்தே.

152. நன்னெறிச்சீர்த் திருமொழியோர் நானூற்று நாற்பதையு
மின்னிசையா லெடுத்தோதி யேழுலகு முய்வித்தாங்
கன்னவயற் புத்தூரி லளவிறந்த பலகால
மின்னுமணி முடிமாயன் றிருவடிக்கீழ் வீற்றிருந்தார்.

2-வது பெரியாழ்வார் பிரபந்தம்

முற்றும்.



Koviloor Digital Library

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
1	2	யாக்கர்களாய்	யரக்கர்களாய்
2	2	யக்கா	யக்கர
4	18	வீட்டைவார்க்	வீடடைவார்க்
5	11	நாடுமகின்	நாடுமதின்
8	15	காண்மிக்க	காண்மின்க
11	3	ஙூரிமுஞ்சி	ஙுரிமுஞ்சி
12	16	தருதருளி	தருநளிரு
13	6	ங்ாளிற்	நாளிற்
15	18	மயக்கிடையிற் படாததடியே	மயக்கிடையிற் படாதடியே
16	21	ஞேங்குத்	ஞேங்குந்
,,	22	சமையர்தன்னை	சமையந்தன்னை
,,	25	மணிபோற் ஞேன்றியுமம்	மணிபோற் ஞேன்றியுறையுமம்
18	8	பெறுபடி	பெறும்படி
22	16	குழத்துதித்த	குலத்துதித்த
,,	32	வினவநிய	வினவரிய
23	4	திறமறந்தர	திறமறிந்தா
24	25	ளைத்த	ளேத்த
25	16	குழாதை	குழாத்தை
,,	24	றிசைந்தன ரிசைந்த	றிசைத்தன ரிசைத்த
26	8	மரறில்லே	மாறில்லே